செய்தி வெளியீடு எண்: 296 நாள் 22.04.2008

**செய்தி வெளியீடு**

**சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த 48 தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு பணி நிரந்தர ஆணைகள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வழங்கினார்**

சென்னை மாநகராட்சியில் 13.05.2006 முதல் பல்வேறு பணியிடங்களில் 7 ஆயிரத்து 523 காலிப் பணியிடங்கள் இருந்தன. இப்பணியிடங்களை பூர்த்தி செய்வதற்கு நேரடி நியமனங்கள் மூலமாகவும், பதவி உயர்வுகள் மூலமாகவும், தொகுப்பூதிய பணியாளர்களின் பணிகளை வரன்முறைப்படுத்துவதன் மூலமாகவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி 59 ஆசிரியர் பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்டு நிரப்பப்பட்டது.

அதே போன்று, சுகாதாரத் துறையில் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் மருத்துவ அலுவலர், மருந்தாளுநர் போன்ற 94 பணியிடங்கள் நிரப்பப்பட்டன. மேலும் 229 தொகுப்பூதிய பணியாளர்களின் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. அதே போன்று, கருணை அடிப்படையில் 500 நபர்கள் 3ம் மற்றும் 4ம் நிலை பணியிடங்களுக்கு நியமனம் செய்யப்பட்டனர்.

இவை தவிர, பல்வேறு பதவி உயர்வுகள் மூலம் வகுப்பு–1 முதல் 4 வரை காலியாக இருந்த ஆயிரத்து 53 பணியிடங்கள் நிரப்பப்பட்டன. இன்று (22.4.2008) 48 தினக்கூலி தொழில்நுட்ப உதவியாளர்களின் பணிவரன்முறைப்படுத்தப்பட்டு நிரந்தர பணியாளர்களாக நியமிக்கப்பட்டு உள்ளனர். ஆக, 13.05.2006 அன்று காலியாக இருந்த 7 ஆயிரத்து 523 பணியிடங்களில், கடந்த 18 மாதங்களில் சென்னை மாநகராட்சியில் 2 ஆயிரத்து 13 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளது.

மேலும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மான்யக் கோரிக்கையில் அறிவித்தபடி சென்னை மாநகராட்சியில் தற்போது தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் 2025 துப்புரவு பணியாளர்கள் நிரந்தர பணியிடங்களில் விரைவில் பணியமர்த்தப்பட உள்ளார்கள். மீதமுள்ள 3485 பணியிடங்கள் நிரப்புவதற்கான நடவடிக்கைகளை சென்னை மாநகராட்சி மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில் இன்று (22.04.2008) சென்னை மாநகராட்சியை சேர்ந்த 48 தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு பணி நிரந்தர ஆணைகளை வழங்கினார்கள். இப்பணியாளர்கள் 4500-125-7000 காலமுறை ஊதிய விகிதத்தில் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

1996ம் ஆண்டு முதல் தினக்கூலி அடிப்படையில் பல்வேறு துறைகளில் நியமிக்கப்பட்டு, 10 ஆண்டு காலமாக பணி நிரிந்தரம் செய்யப்படாமல் இப்பணியாளர்கள் இருந்து வந்தனர். அவர்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, பணி நிரந்தரம் செய்யப்பட்டு சென்னை மாநகராட்சி வார்டுகளில் காலியாக உள்ள இளநிலை பொறியாளருக்கான பொறுப்புகளை மேற்கொள்ள உள்ளனர்.

சென்னை மாநகராட்சியின் பணிகள் இதன் மூலம் மேலும் திறம்பட மேற்கொள்வதற்கு பயனுள்ளதாக அமையும். பணி நிரந்தர ஆணைகளை பெற்றுக்கொண்ட பணியாளர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா.சுப்பிரமணியன், ஆணையாளர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., மன்ற ஆளுங்கட்சித் தலைவர் திரு. ந. இராமலிங்கம், மன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. சைதை ப. ரவி, நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) திரு.எஸ்.சுரேஷ்குமார் நியமனக்குழு உறுப்பினர்கள் திரு. த.வி. முத்துக்கிருஷ்ணன் மற்றும் திரு.மு.வேலாயுதம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

*****

வெளியீடு: இயக்குநர் –செய்தி மக்கள் தொடர்புத்துறை .சென்னை –09